தென் மாவட்ட வெள்ள நிவாரணப் பொருள்கள்: பேருந்துகளில் இலவசமாக கொண்டு செல்லலாம்

பெரம்பலூர்/அரியலூர், டிச. 20: வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் மாவட்ட பகுதி மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை பேருந்துகள் மூலம் இலவசமாக எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்தார்.

பெரம்பலூர், அரியலூரில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை அவர் கூறியது:

மழை பாதிப்பு காரணமாக, திருச்செந்தூர் கோயிலில் கடந்த 3 நாள்களாக தங்கியிருந்தவர்கள் வீடு திரும்புவதற்கு ஏதுவாக புதன்கிழமை முதல் கட்டணமில்லா பேருந்து வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருச்செந்தூர் - திருநெல்வேலி வழித்தடம் மழை வெள்ளத்தால் தடைபட்டுள்ளதால், பயணிகளை மாற்றுப் பாதையில் கன்னியாகுமரி வரை அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் வெள்ள நீர் வடிந்துள்ளதால் 95 சதவீத பேருந்துகள் இயக்கப்படுகின்றன. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வெள்ள நீர் வடியத் தொடங்கியுள்ளது. வெள்ளநீர் வடியும் பகுதிகளுக்கு ஏற்றார்போல், போக்குவரத்து சேவைகளை மீண்டும் தொடங்க சம்பந்தப்பட்ட போக்குவரத்துத் துறை மேலாண்மை இயக்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் உதயநிதியின் அறிவுரையின்படி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் பேருந்துகள் மூலம் இலவசமாக எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர் மழையால் பல்வேறு பகுதிகளில் உள்ள அரசுப் போக்குவரத்து பணிமனைகள் நீரில் மூழ்கியுள்ளன. பல பேருந்துகள் சேதமடைந்துள்ளன. இது குறித்து ஆய்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் பிறகே சேதத்தின் மதிப்பு தெரியவரும் என்றார் அவர்.

ராமேசுவரம் மீனவர்கள் 8 பேர் விடுதலை

இலங்கை மன்னார் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள் 8 பேர்.

ராமேசுவரம், டிச. 20: எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறையில் அடைக்கப்பட்ட ராமேசுவரம் மீனவர்கள் 8 பேரை விடுதலை செய்து, அந்த நாட்டு நீதிமன்றம் புதன்கிழமை உத்தரவிட்டது.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்திலிருந்து கடந்த 6-ஆம் தேதி கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற உயிர்த்தராஜ் என்பவரது விசைப் படகை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கச்சத்தீவு அருகே இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்தனர்.

மேலும், படகில் இருந்த மீனவர்கள் ஜெயஸ்தன் (36), தால்சா (50), லேசர் கெபிஸ்டன் (30), தினேஷ் (38), முனியசாமி (58), அருள் பிரிட்சோன் (28), ஜான் சைமன் (31) ஆகிய 8 பேரையும் கைது செய்து, இலங்கை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி வவுனியா சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில், புதன்கிழமை 8 மீனவர்களும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இனி எல்லை தாண்டி மீன் பிடித்தால் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படும் என எச்சரித்த நீதிபதி சஜீத், அவர்கள் 8 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். ஆனால், படகை விடுவிக்க மறுத்து விட்டார்.

விடுதலை செய்யப்பட்ட 8 மீனவர்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த மீனவர்கள் ஓரிரு நாள்களில் தாயகம் திரும்ப உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் மீது மேலும் ஓர் அவதூறு வழக்கு

விழுப்புரம், டிச. 20: அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் மீது விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேலும் ஓர் அவதூறு வழக்குத் தொடுக்கப்பட்டது.

விழுப்புரம்பழையபேருந்து நிலையம் அருகே கடந்த ஜூன் மாதம் அதிமுக சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் கட்சியின் மாவட்டச் செயலருமான சி.வி.சண்முகம் எம்.பி. முதல்வர் மு.க.ஸ்டாலின் குறித்து அவதூறாக பேசியதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் சி.வி.சண்முகம் மீது அரசு வழக்குரைஞர் சுப்பிரமணியன் அவதூறு வழக்குத் தொடுத்தார். வழக்கை புதன்கிழமை விசாரித்த முதன்மை மாவட்ட நீதிபதி ஆர். பூர்ணிமா, சி.வி.சண்முகம் ஜனவரி 4-ஆம் தேதி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டார்.

சி.வி.சண்முகம் மீது ஏற்கெனவே 3 அவதூறு வழக்குகள் தொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வரும் நிலையில், தற்போது 4-ஆவது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துமஸ்: 640 கூடுதல் பேருந்துகள்

சென்னை, டிச. 20: கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு, 640 கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

சென்னையிலிருந்து திருநெல்வேலி, நாகர்கோவில், மார்த்தாண்டம், தூத்துக்குடி மற்றும் வேளாங்கண்ணி ஆகிய இடங்களுக்கும், கோவை, சேலம், கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தினசரி இயக்கக்கூடிய 2,100 பேருந்துகளுடன் கூடுதலாக டிச.22-ஆம் தேதி 350 பேருந்துகளும், டிச.23-ஆம் தேதி 290 பேருந்துகள் என மொத்தம் 640 கூடுதல் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

சிறப்பு பேருந்துகளில் பயணிக்க www.tnstc.in என்ற இணையதளத்திலும், tnstc official என்ற செயலியிலும் முன்பதிவு செய்யலாம்.

பொன்முடிக்கு தண்டனை விவரம்: உயர்நீதிமன்றம் இன்று அறிவிப்பு

சென்னை, டிச. 20: சொத்துக் குவிப்பு வழக்கில் அமைச்சர் பொன்முடி மற்றும் அவரது மனைவிக்கான தண்டனை விவரத்தை சென்னை உயர்நீதிமன்றம் வியாழக்கிழமை (டிச.21) அறிவிக்கவுள்ளது.

கடந்த 2006-ஆம் ஆண்டுமுதல் 2011-ஆம் ஆண்டு வரையிலான திமுக ஆட்சிக் காலத்தில் உயர்கல்வித் துறை அமைச்சராக இருந்த பொன்முடி, கனிமவளத் துறை அமைச்சராகவும் பதவி வகித்து வந்தார். அப்போது வருமானத்துக்கு அதிகமாக ரூ. 1 கோடியே 75 லட்சம் சொத்துகள் சேர்த்ததாக ஊழல் தடுப்புப் பிரிவு சார்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த விழுப்புரம் சிறப்பு நீதிமன்றம், வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பொன்முடி மற்றும் அவரது மனைவி விசாலாட்சி மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி, இருவரையும் கடந்த 2016-ஆம் ஆண்டு விடுவித்து தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஊழல் தடுப்புப் பிரிவு 2017-ஆம் ஆண்டு மேல்முறையீடு வழக்கை தாக்கல் செய்தது. இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜெயச்சந்திரன் புதன்கிழமை தீர்ப்பளித்தார். அதில், வருமானத்துக்கு அதிகமாக ரூ.1.72 கோடி அளவுக்கு அதாவது 64.90 % அளவுக்கு அமைச்சர் பொன்முடியும், அவரது மனைவி விசாலாட்சியும் சொத்து குவித்துள்ளதாக ஊழல் தடுப்புத் சட்டத்தின் கீழ் போலீஸார் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணம் ஆகியுள்ளன. எனவே, இந்த வழக்கில் இருவரும் குற்றவாளிகள் எனக் குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் தண்டனை விவரங்களை நீதிபதி வியாழக்கிழமை காலை அறிவிக்கவுள்ளார்.

அமைச்சர் பொன்முடி குற்றவாளி என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், அவர் சட்டப்பேரவை உறுப்பினர், அமைச்சர் பதவியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாஜக இன்று ஆர்ப்பாட்டம்

சென்னை, டிச. 20: குடியரசு துணைத் தலைவர், மக்களவைத் தலைவர் ஆகியோர் அவமதிக்கப்பட்டதைக் கண்டித்து பாஜக சார்பில் தமிழகம் முழுவதும் வியாழக்கிழமை (டிச.21) ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை அறிவித்துள்ளார். அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மரபுகளை மீறியும், பொதுமக்களுக்கு தாங்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டிய கடமையை மறந்தும், அரசியல் சாசன பதவியில் உள்ளவர்களிடம் அவமரியாதையாக நடந்து வந்ததையும் நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். குடியரசு துணைத் தலைவர், மக்களவைத் தலைவர் ஆகியோரை அவமரியாதை செய்த ராகுல் காந்தி மற்றும் அவருக்கு துணை நின்ற இதர எதிர்க்கட்சித் தலைவர்கள், உறுப்பினர்களைக் கண்டித்து மாவட்டத் தலைநகரங்களில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலில் கட்டுமானத் துறையில் பணி வாய்ப்பு

சென்னை, டிச.20: இஸ்ரேல் நாட்டில் பணியாற்ற 10,000 கட்டுமானப்பணியாளர்களுக்குவாய்ப்பு இருப்பதால் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான சி.நா.மகேஸ்வரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இஸ்ரேல் நாட்டில் கட்டுமானத் துறையில் (ப்ளாஸ்டெரிங் ஒர்க், செராமிக் டைலிங், பில்டிங் பார்ம் வொர்க் அண்ட் அயர்ன் பென்டிங்) உள்ளிட்ட பணி அனுபவமுள்ள 10,000 கட்டுமானப் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவம் உள்ள 25 வயது முதல் 45 வயதுக்குள்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மாத ஊதியமாக சுமார் ரூ.1,37,000 வழங்கப்படும். இந்தப் பணியில் சேர விரும்பும் தகுதியுடையவர்கள் www.omcmanpower.tn.gov.in எனும் வலைதளம் மூலமாக பதிவு செய்யலாம். மேலும் ovemclnm@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு தங்களின் சுயவிவர விண்ணப்பப்படிவம், கல்வி, பணி, அனுபவச் சான்றிதழ் மற்றும் பாஸ்போர்ட் நகலை டிச.29-ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கலாம்.

கூடுதல் விவரம் அறிய அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் அதிகாரபூர்வ www.omcmanpower.tn.gov.in எனும் வலைதளத்தில் அல்லது தொலைபேசி: 044-22505886, 22502267, கைப்பேசி: 9566239685 என்ற எண்களிலும் தொடர்பு கொள்ளலாம். அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒரு அரசு நிறுவனம் என்பதால் விருப்பமுள்ளவர்கள் நேரடியாகவே இந்நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமலாக்கத் துறை அதிகாரியின் ஜாமீன் மனு தள்ளுபடி

மதுரை, டிச. 20: லஞ்ச வழக்கில் கைதான அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியின் ஜாமீன் மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை புதன்கிழமை தள்ளுபடி செய்தது.

திண்டுக்கல் அரசு மருத்துவர் சுரேஷ்பாபுவிடம் அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி லஞ்சமாக இரு தவணைகளில் ரூ. 40 லட்சம் பெற்றார். இதுதொடர்பாக போது, அவரை மாநில ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு போலீஸார் கைது செய்தனர். இதையடுத்து, அவர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் ஜாமீன் வழங்கக் கோரி, திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் அங்கித் திவாரி தரப்பில் தாக்கல் செய்த மனு ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த நிலையில், அங்கித் திவாரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்தார். அப்போது, இந்த வழக்கில் அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் முன்னிலையாக கால அவகாசம் கோரப்பட்டதால் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதி வி.சிவஞானம் முன் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் ஹசன் முகமது ஜின்னா முன்னிலையாகி, அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரிக்கு எதிராக பல்வேறு வாதங்களை முன்வைத்தார். மேலும், அங்கித் திவாரிக்கு ஜாமீன் வழங்கினால் வழக்கு பாதிக்கப்படும் என வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதி, இந்த வழக்கு தொடர்பான உத்தரவை புதன்கிழமைக்கு ஒத்திவைத்தார்.

இந்த நிலையில், அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரியின் ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்து உயர்நீதிமன்ற நீதிபதி சிவஞானம் புதன்கிழமை உத்தரவிட்டார்.

செம்மரக்கட்டை கடத்தல் வழக்கில் கைது: தலைமைக் காவலர் பணியிடை நீக்கம்

சென்னை, டிச. 20: செம்மரக்கட்டை கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட தலைமைக் காவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

சிவகங்கையைச் சேர்ந்தவர் சந்திரசேகர் (45)., சென்னை சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலைய தலைமைக் காவலரான இவர், இரு நாள்களுக்கு முன்பு ஆந்திர மாநில காவல் துறையினரால், செம்மரக்கட்டை கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டார். அவருடன் மொத்தம் 14 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், 3 டன் செம்மரக்கட்டைகள், இரு கார்கள், ஒரு லாரி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

செம்மரக் கட்டை கடத்தல் வழக்கில் சிக்கிய சந்திரசேகரை, சென்னை காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் பணியிடை நீக்கம் செய்து புதன்கிழமை உத்தரவிட்டார்.

DBS

ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் தங்கக் கடன் வாடிக்கையாளர்கள் தங்களுடைய கடன் தொகையைத் திரும்பச் செலுத்தத் தவறிவிட்டனர் மற்றும் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட்ட பல நினைவூட்டல் அறிவிப்புகள், வங்கியில் பதிவு செய்யப்பட்ட அவர்களின் முகவரிகளுக்கு டெலிவரி செய்யப்பட்டுள்ளன என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

27.12.2023 அன்று அல்லது அதற்கு முன் முழு கடன் தொகை செலுத்தப்படாவிட்டால், வாடிக்கையாளர்களின் பிணையங்கள் **27.12.2023 அன்று காலை 11.00 மணி** அல்லது அதற்குப் பிறகு வேறு எந்த வசதியான தேதியிலும், மறு அறிவிப்பு இல்லாமல் மற்றும் வங்கியின் முழுமையான விருப்பத்தின் பேரில் வங்கியால் பொது ஏலத்தில், வங்கி வளாகத்தில் அல்லது **https://egold.auctiontiger.net** என்ற மின்-ஏல தளம் மூலம் விற்கப்படும்.

குறிப்பு#	வாடிக்கையாளர் பெயர்	கிளை பெயர்	மொத்த எடை	நிகர எடை
79231045	மொய்தீன் S	வேலூர் (NA)	58.50	53.00
49739687	அம்சா P	நெடும்புளி	33.00	29.50
49730922	ஹைதர் அலி காதர் பாஷா	நெடும்புளி	20.50	18.50
49730491	அருண்குமார் சாமு	நெடும்புளி	24.30	21.40

இடம் : சென்னை
நாள் : 19.12.2023

கிளை மேலாளர்
டிபிஎஸ் வங்கி இந்தியா லிமிடெட்

*டிபிஎஸ் வங்கி இந்தியா லிமிடெட், சிங்கப்பூரின் டிபிஎஸ் வங்கி லிமிடெட் நிறுவனத்தின் முழு உரிமத்தின் கீழ் இயங்கும் துணை நிறுவனமாகும்.

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தமிழ்நாடு அரசு
தொழில்நுட்பக் கல்வித்துறை
தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை-600025
முன்தகுதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண்.47த.பொ/வ.ஆ.1/தொநுகவ/2023-24 நாள் 19.12.2023
ஒப்பந்தப்புள்ளி படிவம்: மொத்த தொகை / விலை விகித முறை (இரு உறை முறை)

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை-600025 அவர்களால் [illegible] மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

வ. எண்	வேலையின் பெயர்	[illegible]	முன்வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம்	தகுதியான ஒப்பந்ததாரர்	முன்வைப்புத் தொகை செலுத்தும் முறை
1.	திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தாலுகா கே.பந்தாரப்பள்ளி கிராமத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணி	1260.00	640000/- 15 மாதங்கள்	வகுப்பு 1 மற்றும் அதற்கு மேல்	மின்னணு முறையில்

1. [illegible] http://tntenders.gov.in [illegible]
2. [illegible] 23.01.2024 மாலை 3.00 மணி வரை [illegible]
3. [illegible] 24.01.2024 மாலை 3.30 மணி [illegible]
4. [illegible]

செ.ம.தொ.இ/6732/ஒப்பந்தப்புள்ளி/2023
தலைமைப் பொறியாளர், பொது, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை-600025

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (க & ப) வட்டம் திருவாரூர் -1.
ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம் / இனவிலை முறை

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 17/க (க & ப) வட்டம்/திருவாரூர்/2023-24/ நாள்: 19.12.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க&ப) வட்டம், திருவாரூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 8 பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் – 8 பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியினை அணுகவும்
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : **21.12.2023** முதல் **04.01.2024 பிற்பகல் 3.00 மணி வரை.**
3. ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : **04.01.2024 பிற்பகல் 3.00 மணி வரை.**
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **05.01.2024 முற்பகல் 11.00 மணி முதல்.**

கண்காணிப்புப் பொறியாளர் பொபது.
கட்டட (க & ப) வட்டம் திருவாரூர்-1.

செமதொஇ/6714/ஒப்பந்தப்புள்ளி/2023

केन्द्रीय विद्यालय के (अ) .के .प्र .बल क्षे .सु .औ .तक्कोलम
KENDRIYA VIDYALAYA CISF RTC(A), THAKKOLAM
WALK-IN-INTERVIEW ON: 26.12.2023
तात्कालिक साक्षात्कार (दिनांक:26.12.2023)

Wanted PGT (Biology), on purely contractual basis / **Part time for the session 2023-24**. Eligible candidates may appear for the interview with original certificates on **26/12/2023 from 09.30 AM to 11.00 AM** in this Vidyalaya campus. Qualifications and remuneration are as per KVS Rules. For information regarding qualifications for the above posts and interview application forms, please refer our Vidyalaya websites.

Candidates should follow COVID-19 precautions such as wearing face mask, maintaining social distancing, etc. They should bring food / lunch packet / snack themselves as the interview may take time and such facilities are not possible in Thakkolam.

आवश्यकता है, पूर्ण रूप से संविदात्मक /अंशकालिक आधारित सत्र 2023-24 के लिए पीजीटी (जीवविज्ञान)। | योग्य उम्मीदवार साक्षात्कार के लिए विद्यालय परिसर में दिनांक 26/12/2023 को प्रातः 09:30 बजे से 11:00 बजे तक अपनी उपस्थिति दर्ज करवाएं | योग्यता और पारिश्रमिक केन्द्रीय विद्यालय संगठन के नियमों के अनुसार दिया जाएगा | उपरोक्त पदों की योग्यता के संदर्भ में जानकारी हेतु और आवेदन फॉर्म के लिए विद्यालय की वेब साईट पर जाए |

प्राचार्य **PRINCIPAL**

Contact No: 04177 299590 / 9459870956 /
Websites: www.no2arakkonam.kvs.ac.in
Venue: Kendriya Vidyalaya CISF RTC (A), Thakkolam-631152. स्थान: केन्द्रीय विद्यालय तक्कोलम - 631152

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

பிராந்திய அலுவலகம் :
எண்.43. தரைத் தளம்.
ஹமீதியா சென்டர். ஹாடோஸ் ரோடு. நுங்கம்பாக்கம்.
சென்னை-600006. தமிழ்நாடு.
போன் : +91-44-28238250/ 2828109
E-mail : ro1005@sib.co.in

ஏல விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான ஏல விற்பனை அறிவிப்பு.

இதனால் பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், **தி சௌத் இந்தியன் வங்கி லிட்., குடியாத்தம் கிளை** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) கீழே குறிப்பிட்டுள்ள, அடமானப்படுத்தப்பட்டுள்ள அசையாச்சொத்தினை **12.04.2023** தேதியில் சுவாதீனம் (Possession) மேற்கொண்டவற்றை **தி சௌத் இந்தியன் வங்கி லிட்.**, பிராந்திய அலுவலகம், எண்.43, தரைத்தளம், ஹமீதியா சென்டர், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 006 (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்), வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் **"எங்கு உள்ளதோ அங்கு" "என்ன உள்ளதோ அது" "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **தி சௌத் இந்தியன் வங்கி லிட்., குடியாத்தம் கிளைக்கு** (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) வரவேண்டிய **17.12.2023** அன்றைய தேதி வரையான நிலுவைத் தொகை **ரூ.20,66,312.03 (ரூபாய் இருபது லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து முன்னூற்று பனிரெண்டு மற்றும் பைசா மூன்று மட்டும்) கடன்தாரர் : 1) திரு. சுந்தர்.T**, த/பெ. தமிழரசன், வசிப்பிட முகவரி : எண்.13/137, R.S.நகர், பிச்சனூர், குடியாத்தம், வேலூர், தமிழ்நாடு – 632 602 மற்றும் **உத்தரவாதமளித்தவர் : 2) திருமதி. வித்யா.S**, க/பெ. சுந்தர்.T, வசிப்பிட முகவரி : பச்சையப்பன், ஏர்தாங்கல், நெல்லூர்பேட்டை, குடியாத்தம், வேலூர், தமிழ்நாடு – 632602, **மேலும் :** எண்.13/137, R.S.நகர், பிச்சனூர், குடியாத்தம், வேலூர், தமிழ்நாடு – 632 602 என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு **19.01.2024** அன்று பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளார்.

ரிசர்வ் விலை	முன்வைப்புத் தொகை (EMD)
ரூ.22,23,000/- (ரூபாய் இருபத்து இரண்டு லட்சத்து இருபத்து மூன்றாயிரம் மட்டும்)	ரூ.2,22,300/- (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து முன்னூறு மட்டும்)

அசையாச் சொத்து விபரம்

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலூகா, கொண்டசமுத்திரம் கிராமம், சர்வே எண்.186, மறு சர்வே எண்.186/2A1, டவுன் சர்வே எண்.300/1, வார்டு எண்.7, பிளாக் எண்.1, இதிலுள்ளதும் அதன் பகுதியுமான 1648 சதுரடி குடியிருப்பு நிலம், அனைத்துப் பிற கட்டுமானங்களுடன், அபிவிருத்திகளுடன், அங்குள்ள வசதிகளில் உரிமைகளுடன் மற்றும் பாத்திய அனுபந்தங்களுடன். குடியாத்தம் சார் பதிவாளர் அலுவலகத்து 27.02.2019 தேதிய விற்பனைப் பத்திர எண்.1650/2019 ல் மேலும் விவரிக்கப்பட்டுள்ள இச்சொத்து, திரு.T.சுந்தருக்குச் சொந்தமானது. **எல்லைகள் :** வடக்கு – கோதகுப்பம் ஆனந்தனின் சொத்து, கிழக்கு – வீதி, தெற்கு – வஜ்ரத்தின் சொத்து, மேற்கு – டாக்டர். கிருஷ்ணசாமியின் நிலம். விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனீந்த தி சௌத் இந்தியன் வங்கி லிட்., இணையதளத்தின் லிங்க்கில் பார்வையிடலாம். (website i.e. www. southindianbank.com)

தேதி : 18.12.2023
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.

தி சௌத் இந்தியன் பேங்க் லிட். பதிவு அலுவலகம் : 'SIB ஹவுஸ்', T.B.ரோடு, மிஷன் குவார்ட்டர்ஸ், திருச்சூர் – 680001, கேரளா. போன் : +91-487-2420020, பேக்ஸ் : +91-487-2442021. இ-மெயில் : sibcorporate@sib.co.in
CIN : L65191KL1929PLC001017

ICICI Home Finance

நிறுவன அலுவலகம்: ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ICICI HFC டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா
கிளை அலுவலகம்: 1வது தளம், மனை எண்.8/3, முனிசிபிள் காலனி சத்யா மேன்ஷன், கழிஞ்சூர் கிராமம், காங்கயநல்லூர் சாலை, காந்திநகர் காட்பாடி, வேலூர்-632006

[பார்க்க விதி 8(6)-ஷரத்துகள்]

அசையா சொத்துகளின் விற்பனைக்கான அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6)-ஷரத்துகள் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான E-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம்/ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகள், மேற்படி ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்-ன் அதிகாரபூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனத்தில் (SYMBOLIC POSSESSION) எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தச் சொத்துகள் பின்வருமாறு "உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளது உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன. அதன் சுருக்கமான விவரங்கள் பின்வருமாறு.

வ. எண்.	கடன்தாரர்கள் / கூட்டுக்கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் / சட்ட வாரிசுகள் பெயர் & கடன் கணக்கு எண்	கடனுக்கு ஈடான அடமான சொத்து விவரம்- தெரிந்த வில்லங்கங்களுடன் (எதுவுமிருப்பின்)	நிலுவைத் தொகை ரூ.	ரிசர்வ் விலை ரூ. / டேவணித் தொகை (EMD) ரூ.	சொத்தினைப் பார்வையிடுதல்: தேதி /நேரம்	ஏலத்தேதி & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	தென்னரசு S (கடன்தாரர்) கயல்விழி T (கூட்டுக் கடன்தாரர்) கடன் கணக்கு எண். LHVAN00000848957 & LHVAN00000848956 & LHVAN00000848958	100/46, 100/45, 100/26, சமாஜ் மலர்கொடி இல்லம் கதவு எண் 81 பார்த்தசாரதி தெரு அருகில், ஜோலார்பேட்டை மூன்றாம் நிலை நகராட்சி திருப்பத்தூர் தாலுகா வேலூர் தமிழ்நாடு 632001 வேலூர் தமிழ்நாடு 632001.	ரூ. 77,91,643/- டிசம்பர் 15, 2023	ரூ. 1,36,40,320/- ரூ. 13,64,040/-	ஜனவரி 15, 2024, காலை 11.00-பிற்பகல் 03.00 வரை	ஜனவரி 25, 2024, பிற்பகல் 02.00-03.00 வரை

ஆன்லைன் ஏலமானது, ஏல ஏஜென்சியான GlobeTech-ன் இணையதளம் வாயிலாக (URL Link-https://BestAuctionDeal.com) நடைபெறும். மொத்த கடன் நிலுவையை வட்டியுடன் சேர்த்து **ஜனவரி, 24, 2024 மாலை 5.00** மணிக்குள் செலுத்துவதற்கு கடைசி வாய்ப்பாக அடமானதாரர்களுக்கும், இந்த அறிவிப்பு அனுப்பப்படுபவருக்கும் இதன் மூலம் அளிக்கப்படுகிறது. தவறினால், கடனுக்கு ஈடான இந்த சொத்து அட்டவணைப்படி விற்கப்படும்.

உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள், தங்களது டேவணித் தொகையை (EMD), RTGS /வரைவோலை (DD) ('E' பத்தியில் குறிப்பிட்டுள்ளபடி) **ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 1வது தளம், பிளாட் எண்.8/3, முனிசிபிள் காலனி சத்யா மேன்ஷன், கழிஞ்சூர் கிராமம், காங்கயநல்லூர் சாலை, காந்திநகர் காட்பாடி, வேலூர்-632006-ல் ஜனவரி 24, 2024, அன்று அல்லது முன்னர் மாலை 4:00 மணிக்குள்** சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகு, உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் தங்களது டெண்டர் ஆவணங்களின் பிரதிகளை கையொப்பமிட்டு **ஜனவரி 24, 2024, அன்று அல்லது முன்னர் மாலை 5:00 மணிக்குள் ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 1வது தளம், பிளாட் எண். 8/3, முனிசிபிள் காலனி சத்யா மேன்ஷன், கழிஞ்சூர் கிராமம், காங்கயநல்லூர் சாலை, காந்திநகர் காட்பாடி, வேலூர்-632006-ல்** சமர்ப்பிக்க வேண்டும். EMD தொகையை **"ICICI HOME FINANCE COMPANY LIMITED-AUCTION"** என்ற பெயரில் வேலூரில் மாற்றத்தக்க ஒரு தேசியமயமான / ஷெட்யூல்டு வங்கியின் DD வடிவில் இருந்திட வேண்டும்.

மேலும், ஏலம் பற்றிய விளக்கங்களுக்கும், டெண்டர் சமர்ப்பிப்பது தொடர்பான விதிமுறை நிபந்தனைகளுக்கும் சொத்துகளைப் பார்வையிடுவதற்கும் தொடர்பு கொள்ளவும்: **ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-ன் மொபைல் 9920807300 அல்லது விற்பனை & மார்க்கெட்டிங் பங்குதாரர் NexXen Solutions Private Limited.**

காரணம் எதையும் குறிப்பிடாமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைக் குறிப்பீடுகளையும் நிராகரிக்க அதிகாரபூர்வ அலுவலருக்கு உரிமையுண்டு.

விற்பனை குறித்த விரிவான விதி முறை நிபந்தனைகளுக்கு இணையதளம் பார்க்க: https://www.icicihfc.com/

தேதி: டிசம்பர், 21,2023
இடம்: வேலூர்

அதிகாரபூர்வ அலுவலர்
ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

बैंक ऑफ़ बड़ौदा
பாங்க் ஆஃப் பரோடா

குடியாத்தம் கிளை
எண். 162, மேல்பட்டி சாலை, சாந்தாபேட்டை,
குடியாத்தம், வேலூர் மாவட்டம் - 632 602.
தொலைபேசி: **04171-222650**

நகைக்கடன் பொது ஏல அறிவிப்பு

கீழ்க்கண்ட நபர்கள் எங்களது வங்கியின் கீழ்க்கண்ட கிளைகளில் தங்க நகை ஈட்டின் பேரில் நகைக்கடன் பெற்று நாளது தேதி வரை அசலும், வட்டியும் செலுத்தவில்லை என பதிவு தபால் மூலம் ஏல அறிவிப்பு அனுப்பப்பட்டும் நாளது வரையில் கடனை திரும்பச் செலுத்தவில்லை. ஆகையால் **29.12.2023** க்குள் நிலுவைத் தொகை மற்றும் வட்டி இதர தொகைகளையும் செலுத்தி தங்களது நகைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் கீழே குறிப்பிட்ட கிளைகளில் **29.12.2023** அன்று **மாலை 3.30 மணி அளவில்** நகைகள் ஏலம் விடப்படும் என்பதையும் அல்லது வங்கியால் வேறு எந்த அறிவிப்பும் வெளியிடாமல் வேறு வசதியான தேதிக்கு மாற்றுவதற்கும் அதிகாரம் உள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ எண்	கடன் வழங்கப்பட்ட தேதி	கடன் கணக்கு எண்	கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	கடன் தொகை (ரூ)	நிகர எடை (கிராமில்)
1	06.05.2023	45140600012829	**திரு. குமாரவேல் K.S**, த/பெ. சதாசிவம், எண். 2, நாச்சாரி அம்மன் தெரு, காமாட்சியம்மா பேட்டை, குடியாத்தம், வேலூர் மாவட்டம், தமிழ்நாடு - 632 602	1,90,000	48

ஏல தேதி மற்றும் நேரம் : 29.12.2023, மாலை 3.30 மணி

குறிப்பு : 1. ஏலதாரர்கள் தங்களது **KYC** விபரங்களை கட்டாயம் கொண்டு வர வேண்டும். 2. ரூ. 10,000 ஏல முன்வைப்புத் தொகையை **வரைவோலை மூலம் மட்டுமே** செலுத்த வேண்டும். 3. ஏல தேதி அன்றே ஏலம் எடுத்தவர்கள் முழுத்தொகையையும் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் ஏலம் முன்வைப்பு தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

தேதி : 20.12.2023
இடம் : குடியாத்தம்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாங்க் ஆ.்.ப் பரோடா